சுருக்கம்

கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் – பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் – விண்ணப்பம் அளிக்கும்போது திருமணமாகாமல் இருந்து பின்னர் பணிநியமனத்திற்கு முன்னர் திருமணமான பெண் வாரிசுதாரருக்கும் பணி நியமனம் வழங்குதல் – தெளிவுரைகள் வெளியிடப்படுகின்றன.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை

அரசாணை (நிலை) எண்: 96 நாள்: 18.06.2012

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 212, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 29.11.2001.
2. அரசு கடிதம் எண். 67770/ப்பி./2001–1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 19.12.2001.
3. அரசாணை (நிலை) எண். 16, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 21.02.2006.
4. அரசாணை (நிலை) எண். 165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 30.08.2010.

-----

ஆணை:

மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் நெருங்கிய உறவினர்கள் (near relatives) என்று குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுள் திருமணமாகாத மகள் என்ற நிலையில், பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்து, பணி நியமனம் வழங்கப்படுவதற்கு முன்பே திருமணம் செய்து கொண்டவர்கள், கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கும் பணி நியமனம் வழங்கிட கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1) திருமணமாகாத நிலையில் உள்ள பெண்களுக்கு, அக்குடும்பத்தில் உள்ள பிற வாரிசுதாரர்கள் அளித்த ‘‘மறுப்பின்மைச் சான்றிதழ்’’, திருமணமான பின், அப்பெண்ணுக்கு பணி அளிக்கப்படும்போது மீண்டும் மற்ற வாரிசுதாரர்களால் ‘‘மறுப்பின்மைச் சான்றிதழ்’’ வழங்கப்பட வேண்டும்.

2) திருமணம் செய்து கொண்ட பின்னர் பணி வாய்ப்பு பெறும் தனியர், தனது பெற்றோரின் குடும்பத்திற்கு உதவிபுரியும் வகையில் உறுதி ஆவணம் வழங்கப்பட வேண்டும்.

3) கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கோரியுள்ள திருமணமாகாத பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் நபர், எதிர் காலத்தில் அவரால் அவரது பெற்றோருக்குச் செய்யும் உதவிக்கு மறுப்பு ஏதும் ஏற்படுத்த மாட்டேன் என்று உறுதிமொழியை அளிக்க வேண்டும்.

மேற்படி அரசாணை, அது வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

த.பி.பா.,

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை மூலம் நேரடி பணிநியமன தடையாணை பிறப்பித்த நாளான, அதாவது 29.11.2001–க்கு முன்னர் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளித்து, 29.11.2001–க்கு பின்னர் திருமணம் செய்துகொண்ட பெண் வாரிசுதாரர்களுக்கு அவர்கள் இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாமா என்பது குறித்து தெளிவுரைகள் வழங்குமாறு வணிகவரி ஆணையர் அரசிடம் கோரியிருந்தார்.

3. இந்நேர்வினை கவனமாக ஆய்வு செய்த அரசு, 29.11.2001–க்கு முன்னர் கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளித்து 29.11.2001–க்கு பின்னர் திருமணம் செய்துகொண்ட பெண் வாரிசுதாரர்களுக்கு அவர்கள் இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்று முடிவு செய்துள்ளது.

4. அதன்படி, 29.11.2001–க்கு பின்னர் திருமணம் செய்துகொண்ட பெண் வாரிசுதாரர்களுக்கு அவர்கள் இதர தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது. எனினும், 29.11.2001–ற்கு முன்னர் திருமணம் செய்துக் கொண்ட பெண் வாரிசுதாரர்களுக்கு இவ்வரசாணை பொருந்தாது என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் பியாரெ
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை-600 009
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை –600 009
அனைத்துறை தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட நீதிபதிகள்
மாவட்ட உரிமையில் நீதிமன்ற நீதிபதிகள்
பதிவாளர், உயர்நீதிமன்றம் சென்னை -104
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்ற கிளை- மதுரை
அரசு வழக்குரைஞர், சென்னை / மதுரை
முதன்மை மாநிலக் கணக்காயர் சென்னை –600 018
மாநிலக் கணக்காயர் ( தணிக்கை) சென்னை 600 018
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை 600 006.
இயக்குநர் , கருவூலகத்துறை சென்னை 600 035
அனைத்து மாவட்ட கருவூலகத் தலைவர்கள்
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்

முதலமைச்சர் அலுவலகம், சென்னை -600 009.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–600 009
சட்டத்துறை, சென்னை–600 009
தொழிலாளர் நல அமைச்சரின் தனிச் செயலர், சென்னை 600 009.

நகல்:-

முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை சென்னை –600 009
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, சென்னை-600009

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கி.வைகை 18/6/12
பிரிவு அலுவலர்